# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2386 - 2024 මැයි මස 22 වැනි බදාදා - 2024.05.22

*2386 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 70 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மே மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*.

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

69 - B 082572- 353 (2024/05)

# நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்

**அறிவித்தல்**

**பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்**

*இரத்தினபுரி மேல் நீதிமன்ற வலயத்தினுள் சிங்கள மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. கிரிமுர லியனகே கருணாதாஸ அவர்கள் 2023.06.20 ஆந் திகதி தொடக்கம் பதவி விலகியதை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*பிரதீப் யசரத்ன,*
*செயலாளர்,*
*பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்,*
*மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி*
*அமைச்சு.*

கொழும்பு,
*2024,ஏப்பிறல் 10.*

*05- 270*

---

**அறிவித்தல்**

**பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்**

*கண்டி மேல் நீதிமன்ற வலயத்தினுள் சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. நேசராஜா மஹேந்திரராஜா அவர்கள் 2023.10.01 ஆந் திகதி தொடக்கம் பதவி விலகியதை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

*பிரதீப் யசரத்ன,*
*செயலாளர்,*
*பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்,*
*மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி*
*அமைச்சு.*

கொழும்பு,
*2024,ஏப்பிறல் 10.*

*05- 268*

---

**அறிவித்தல்**

**பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்**

*குருநாகல் மேல் நீதிமன்ற வலயத்தினுள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகள் மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு.மஹமாலகே ஜோசப் நிமல் டன்ஸ்டன் பிரனாந்து அவர்கள் 2023.12.31 ஆந் திகதி தொடக்கம் பதவி விலகியதை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

*பிரதீப் யசரத்ன,*
*செயலாளர்,*
*பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்,*
*மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி*
*அமைச்சு.*

கொழும்பு,
*2024, ஏப்பிறல் 10.*

*05- 269*

**அறிவித்தல்**

**பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்**

*மாத்தறை மேல் நீதிமன்ற வலயத்தினுள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகள் மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு.கருணாதாஸ எதிரிவீர அவர்கள் 2023.01.01 ஆந் திகதி முதல் பதவி விலகியதை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

*பிரதீப் யசரத்னா,*
*செயலாளர்,*
*பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,*
*மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி*
*அமைச்சு.*

*கொழும்பு,*
*2024, ஏப்பிறல் 05.*

*05- 267*

---

**அறிவித்தல்**

**பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்**

*கொழும்பு மேல் நீதிமன்ற வலயத்தினுள் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகள் மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. ஹேரத் முதியன்சேலாகே தொன் ஜயந்த பெரேரா அவர்கள் 2023.03.20 ஆந் திகதி தொடக்கம் பதவி விலகியதை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

*பிரதீப் யசரத்னா,*
*செயலாளர்,*
*பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,*
*மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி*
*அமைச்சு.*

*கொழும்பு,*
*2024, ஏப்பிறல் 05.*

*05- 266*

---

**அறிவித்தல்**

**பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசு கட்டளைச் சட்டம்**

*கொழும்பு மேல் நீதிமன்ற வலயத்தினுள் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. விக்ரமசிங்ஹ வாசல ஏக்கநாயக்க முதியன்சேலாகே விமலதர்ம ஏக்கநாயக்க அவர்கள் 2022.10.01 ஆந் திகதி தொடக்கம் பதவி விலகியதை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

*பிரதீப் யசரத்னா,*
*செயலாளர்,*
*பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,*
*மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி*
*அமைச்சு.*

*கொழும்பு,*
*2024, ஏப்பிறல் 05.*

*05- 265*

**அறிவித்தல்**

**பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்**

*அவிசவாளை மேல் நீதிமன்ற வலயத்தினுள் சிங்கள மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. லங்கேஸ்வர வில்மட் சேதுங்க அவர்கள் 2022.12.31 ஆந் திகதி தொடக்கம் பதவி விலகியதை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

*பிரதீப் யசரத்னா,*
*செயலாளர்,*
*பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,*
*மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி*
*அமைச்சு.*

*கொழும்பு,*
*2024, ஏப்பிறல் 05.*

*05- 264*

---

## *நானாவித அறிவித்தல்கள்*

**மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில்**

***( அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் கொழும்பில் நடைபெறுவது)***

*இலக்கம் 107, பள்ளிதொர வீதி, தெஹிவளை என்னும் முகவரியைச் சேர்ந்த பரடைம் குளோதிங் ( பிரைவட்) லிமிடட் ( PV 16068 ) விடயத்திலும்*

வழக்கு இல. : CHC 26/ 20024/CO

*1. இலக்கம் 10, கொரககஹ மாவத்தை, கொழும்பு 06 என்னும் முகவரியைச் சேர்ந்த தீபான் அம்ரட்லால் அமலீன்,*

*2.இலக்கம் 149, சுவிசுத்தராம வீதி, கொழும்பு 06 என்னும் முகவரியைச் சேர்ந்த பிரசாந்த் மஹேந்திரா அமலீன்.*

*மனுதாரர்*

*மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இலக்கம் 107, பள்ளிதொர வீதி, தெஹிவளை என்னும் முகவரியைச் சேர்ந்த பரடைம் குளோதிங் (பிரைவட்) லிமிடட் (PV 16068) நிறுவனத்தை, மேல் மாகாணத்தின் மேல் நீதி மன்றத்தால் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் கொழும்பில் நடைபெறுவது) ஒடுக்கப்படுவதற்கான விண்ணப்பம் மனுதாரர்களான இலக்கம் 10, கொரககஹ மாவத்தை, கொழும்பு 06 என்னும் முகவரியைச் சேர்ந்த தீபான் அம்ரட்லால் அமலீன் மற்றும் இலக்கம் 149, சுவிசுத்தராம வீதி, கொழும்பு 06 என்னும் முகவரியைச் சேர்ந்த பிரசாந்த் மகேந்திரா அமலீன் ஆகியோரால் 2024ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டது என்றும், இதில் குறித்த மனு 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி மேற்கூறப்பட்ட நீதிமன்றத்தின் முன் விசாரிக்கப்படுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளதெனவும், குறித்த மனு சம்பந்தமாக குறித்த கம்பெனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது ஆதரவு அல்லது எதிர்ப்பு கட்டளை பிறப்பிக்க விரும்பின் விசாரணையின் போது நேரடியாகவோ அல்லது சட்டத்தரணி மூலாகவோ அல்லது அந்நோக்கத்திற்கான பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும் குறித்த கம்பெனிக்கு எந்தவொரு கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்கு தேவைப்படின் மனுவின் ஒரு பிரதி கீழ்க்கையொப்பமிட்டவர்களினால் அதற்குரிய கட்டணத்தின் படி பணக்கொடுப்பனவின் பிரகாரம் வழங்கப்படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

ரன்வன்கொன்னகே நதாலி செனெல் லிவேரா,
சட்டத்தரணி மற்றும் நொத்தாரிசு,
இல. 367 , 4/1, டாம் வீதி, கொழும்பு 01200
தொலைபேசி இல.: (011) 2544400.

**குறிப்பு**: மேற்குறித்த மனுவின் விசாரணையின் போது நேரில் சமுகமளிக்க எவராவது நோக்கம் கொள்வாராயின் அவரின் அல்லது அவர்களின் நோக்கம் பற்றிய அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணி ரன்வன்கொன்னகே நதாலி செனெல் லிவேரா இற்கு நேரில் அல்லது தபால் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். நபர்களின் பெயர்கள் முகவரிகள் அறிவித்தலில் குறிப்பிடப்பட வேண்டும் அல்லது குழுமமாயின் குழுமத்தின் பெயர் முகவரியுடன் நபரினால் அல்லது குழுமத்தினால் அல்லது அவரது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியால் ( அவ்வாறு இருப்பின்) கையொப்பமிடப்பட்டு நேரடியாக அல்லது தபால் மூலம் ரன்வன்கொன்னகே நதாலி செனெல் லிவேரா இற்கு 2024, ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

ஆர். என். எஸ். லிவேரா,
ரன்வன்கொன்னகே நதாலி செனெல் லிவேரா ,
மனுதாரர்களுக்கான சட்டத்தரணிகள்.

05- 275

---

### சர்வதேச மனித உரிமைகள் கவுன்சிலைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

மேஜர் பிரதீப் உந்துகொட ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "சர்வதேச மனித உரிமைகள் கவுன்சிலைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதே இச் சட்டமூலத்தின் நோக்கமாகும்:

(அ) நிலைபெறுதகு வாழ்க்கைப் பழக்கங்கள், காப்புறுதி மற்றும் இலங்கையின் பல்லுயிர் இனங்களை பாதுகாக்கும் கல்வித் திட்டங்களை செயற்படுத்தல்;

(ஆ) இலங்கைப் பாரம்பரியங்களை சர்வதேச ரீதியாக அறிமுகப்படுத்துவதற்காக கலாச்சார வைபவங்கள், சித்திரக் கண்காட்சிகள் மற்றும் பரிமாற்றல் திட்டங்களை ஏற்பாடு செய்தல், இது காலாச்சார புரிந்துணர்வுகள் மற்றும் மதிப்பளித்தலுக்கு உதவும்;

(இ) பரஸ்பர கலாச்சார ஒத்துழைப்பை விரிவாக்கும் ஒன்றிணைப்புக்கள், கண்காட்சிகள் மற்றும் திட்டங்களுக்கான வசதிகள் செய்து கொடுப்பதற்காக சர்வதேச அமைப்புகளுடன் கைகோர்த்தல்,

பிறவும்.

மேஜர் பிரதீப் உந்துகொட ,
பாராளுமன்ற உறுப்பினர்.

05- 277

---

### ஐக்கிய மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

மேஜர் பிரதீப் உந்துகொட ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "ஐக்கிய மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த அமைப்பை கூட்டிணைப்பதே இச் சட்டமூலத்தின் நோக்கமாகும்:

1. அத்தியாவசிய விநியோகங்கள், தற்காலிக இருப்பிடங்கள் மற்றும் மருத்து உதவிகள் உட்பட வழங்களுக்காக குலப்பமான காலங்களில் கைகொடுக்க திடீர் உதிவிக்கான முறைமையொன்றினை ஏற்பாடு செய்தல்;

2. தெளிவூட்டும் வேலைத்திட்டங்கள் மூலம் மனித உரிமைகளுக்காக நிற்றல் மனித உரிமைகள் மீறல்களுக்கு முகம் கொடுக்கும் நபர்களுக்காக சட்ட ஆலோசனைகள் மற்றும் உதவிகளை வழங்குதல். இச் சட்டவல்லுநர்கள் மற்றும் அமைப்புக்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதனை உள்ளடக்கும்;

3. கௌரவம் , சகிப்புத்தன்மை மற்றும் சமத்துவம் ஆகிய கலாச்சார விழுமியங்களை வளர்ப்பதன் மூலம் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை அறிவூட்டும் திட்டமொன்றினை முறைப்படுத்தல்;

பிறவும்.

மேஜர் பிரதீப் உந்துகொட ,
பாராளுமன்ற உறுப்பினர்.

05-276